பயிற்சி ! முயற்சி !! வளர்ச்சி !!

Regd. No. 18/2014

# SALEM GOVT. I.T.I. ALUMNI ASSOCIATION
# சேலம் அ.தொ.ப. நிலைய முன்னாள் பயிற்சியாளர்கள் பேரவை

சேலம் - 636 007.

அன்புடையீர், வணக்கம்.

நமது சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று இன்று நலமுடனும் வளமுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் பெருவாரியான சகோதர / சகோதரிகளின் நீண்டநாள் கனவாக மனதில் புதைந்திருந்த, நாம் பயிற்சி பெற்ற சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நம்மால் ஆன சிறுசிறு உதவிகளை செய்திட வேண்டும் என்ற கனவை நினைவாக்கிட உருவானதே **Salem Govt. I.T.I. Alumni Association** என்கிற அமைப்பாகும்.

**சங்கப் பதிவு :** 6-2-2014 அன்று முறைப்படி **Salem Govt. I.T.I. Alumni Association** என பதிவு செய்யப்பட்டது. (பதிவு எண். 18/2014, நாள் : 6-2-2014) முறையாக வருடந்தோறும் பொதுக்குழு கூட்டப்பட்டு, வரவு செலவு கணக்குகள் ஆண்டிற்கு ஒருமுறை தணிக்கை செய்யப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

**சங்கத்தின் நோக்கங்கள் :**

1. சேலம் Govt. I.T.I. யில் பயின்ற முன்னாள் பயிற்சியாளர்களை அடையாளம் கண்டு, அவர்களின் நலனுக்காகப் பாடுபடுதல்.
2. சேலம் Govt. I.T.I. யின் நிர்வாக அனுமதியுடன், சேலம் Govt. I.T.I. யில் பயின்று வரும் பயிற்சியாளர்களுக்கு, தொழிற்கல்வித் துறையில் சிறந்து விளங்கும் கல்வியாளர்களைக் கொண்டு இலவச சிறப்பு பயிற்சி அளித்தல்.
3. உடல் நலன் பேணுதல், உடற்பயிற்சி, விளையாட்டு குறித்த தகவல்களை அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்தல்.
4. அரசால் நடத்தப்படும் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வை பயிற்சியாளர்களிடையே ஏற்படுத்துதல். மேற்படி தேர்வுகளில் கலந்து கொள்வதற்கான பயிற்சியை இலவசமாக அளித்தல்.
5. தொழிற்துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் முன்னேற்றம் குறித்த தகவல் அடங்கிய புத்தகம் வெளியிடுதல், துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்தல் மற்றும் பிற உரிய ஊடகங்கள் மூலம் சங்க உறுப்பினர் மற்றும் பயிற்சியாளர்களுக்கு கொண்டு செல்தல்.
6. அகில இந்திய தொழிற் தேர்வில் அனைத்து மட்டத்திலும் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற பயிற்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் மாதிரி தேர்வு நடத்தி பயிற்சி அளித்தல்.
7. சேலம் Govt. I.T.I. -க்கும், பெற்றோர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து நட்புறவை வளர்த்தல்.
8. தொழிற்சாலைகளை அணுகி, இறுதியாண்டு பயிற்சியாளர்களுக்கு Campus Interview மூலம் Apprentice Training மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கிடத் தேவையான பணிகளை மேற்கொள்ளுதல்.
9. அனைத்துவகையான தொழில் வளர்ச்சி குறித்த அறிவை பயிற்சியாளர்களுக்கு கொண்டு செல்லும் விதமாக சேலம் Govt. I.T.I. நிர்வாகத்துடன் இணைந்து பயிற்சியாளர்களை Industrial Visit-க்கு அழைத்துச் செல்லுதல்.
10. ஆதரவற்ற பயிற்சியாளர்களின் பயிற்சிக்கு இயன்ற வரை உதவுதல்.

11. அரசின் அனுமதி மற்றும் மக்களின் ஒத்துழைப்போடு எங்கும் தூய்மை, எங்கும் பசுமையை உருவாக்க முழு முயற்சி மேற்கொள்தல்.

12. அரசியல் சார்பற்றும் மற்றும் அரசியல் நோக்கமற்றும் செயல்படுவது.

**சங்கத்தின் முயற்சியால் நிறைவேற்றப்பட்ட நலத்திட்டங்கள் :**

1. நமது அ.தொ.ப.நிலையத்தைச் சுற்றி டைட்டான் நிறுவனத்தின் மூலம் பாதுகாப்பான **சுற்றுச்சுவர் கட்டுமானம்** மற்றும் பயிற்சியாளர்களுக்குத் தேவையான **மேசை - நாற்காலிகள்** (சுமார் 37 இலட்சம் மதிப்பில்) சிறப்பான முறையில் அமைத்துத் தரப்பட்டன.

2. சென்னை Hyundai Foundation மூலம் ரூ. 8,00,000/- மதிப்பீட்டில் பயிற்சியாளர்களுக்கு **வகுப்பறை** கட்டித் தரப்பட்டு, பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், MMV பயிற்சியாளர்களுக்கு ரூ. 5,00,000/- மதிப்பீட்டில் MMV லேப் அமைத்துத் தரவும் இசைந்துள்ளார்கள்.

3. திறனாய்வுத் தேர்வில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு தொழிற்பிரிவு வாரியாக ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் **Reward** (தலா ரூ. 1000/-) வழங்கப்பட்டு வருகிறது.

4. மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் விளையாட்டு வீரர்களுக்கு தேவையின் அடிப்படையில், **ஆடைகள், விளையாட்டு உபகரணங்கள்** மற்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

5. அனைத்துவகையான தொழில் வளர்ச்சி குறித்த அறிவை பயிற்சியாளர்களுக்கு கொண்டு செல்லும் விதமாக சேலம் Govt. I.T.I. நிர்வாகத்துடன் இணைந்து பயிற்சியாளர்களை **Industrial Visit**-க்கு அழைத்துச் செல்லப்பட்டு வருகிறது.

6. மரக்கன்று நடும் விழாவிற்கு (உலக சுற்றுச்சூழல் தினம் 5-4-2015) மரக்கன்றுகள் நடுவதற்காக JCP மூலமாக I.T.I. வளாகம் சீர்படுத்தப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு, **350 மரக்கன்றுகள்** நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

7. I.T.I. வளாகத்தில் (சுமார் ரூ.20,000/- திட்டமதிப்பில்) பயிற்சியாளர்களுக்கான **பழுதடைந்த கழிவறை Glass Set**-களை **புதியதாக** மாற்றி பயன்படுத்தும் நிலையில் தயார் செய்யப்பட்டு, **Water Line** போட்டுக் கொடுத்து, **Electric Work** மற்றும் **White Wash** செய்து கொடுக்கப்பட்டது.

8. நமது அ.தொ.ப.நிலைய பயிற்சியாளர்களுக்கு **திறன் மேம்பாட்டு ஊக்கப்பயிற்சி, Apprentice**-ன் முக்கியத்துவம், **Personality Development, How to attend the Interview, Maths Shortcut method, Job Opportunity, Make our resume yourself**, போட்டித் தேர்வுகளுக்கு **சிறப்பு பயிற்சி வகுப்புகள்** வருடந்தோறும் தொடர்ந்து 5 நாட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

9. நமது **Alumni** முயற்சியால் லயன்ஸ் கிளப் சார்பாக, **1000 லிட்டர் கொள்ளவு கொண்ட குடிநீர் கொள்கலன்** மற்றும் **பிளம்பிங் மெட்டீரியல்ஸ்** வழங்கப்பட்டு, விடுதி மாணவர்களின் பயன்பாட்டிற்காக பொருத்தித் தரப்பட்டது.

10. நமது உறுப்பினர் திரு. S. பாலசுப்ரமணியம் G.H. அவர்களின் ஆலோசனை மற்றும் சீரிய வழிகாட்டுதல் மூலம் திரு. M.K. செல்வராஜ் Ex.M.L.A., அவர்களின் நிதி உதவியால் (சுமார் ரூ.10,00,000/- மதிப்பில்) "**பயிற்சியாளர்கள் உணவருந்தும் கூடம்**" கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

11. திரு. பன்னீர்செல்வம் M.P., அவர்களின் நிதி உதவியில் (சுமார் ரூ.2,50,000/- மதிப்பில்) "**போர்வெல் மற்றும் மோட்டார்**" அமைக்கப்பட்டு, "**சின்டெக்ஸ் டேங்க்**" வைத்துக் கொடுக்கப்பட்டது.

12. நமது அ.தொ.ப.நிலையத்தில் சுமார் 50 ஆண்டுகாலமாக முழுமையாக பூர்த்தி செய்யப்படாத குடிநீர் பிரச்சனையை, அன்றையை நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும், தற்போதைய தமிழக முதல்வருமான திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களிடம் முறையிட்டு, அவரது வழிகாட்டுதலின்படி குடிநீர் இணைப்பு பெறப்பட்டு, **குடிநீர் பிரச்சனை முழுமையாகத் தீர்க்கப்பட்டது.**

13. SSP-ன் CSR Activity உதவியுடன் நமது SSP உறுப்பினர்களின் வழிகாட்டுதலின்படி, அ.தொ.ப.நிலையத்தில் "**நிலத்தடி குடிநீர் தொட்டி**" அமைக்கப்பட்டு (சுமார் ரூ.2,00,000/- மதிப்பில்) , பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

14. SSP-ன் CSR Activity உதவியுடன் நமது SSP உறுப்பினர்களின் வழிகாட்டுதலின்படி, அ.தொ.ப.நிலைய "**மகளிர் பயன்பாட்டிற்கான கழிவறை கட்டிடம்**" கட்டிக் கொடுக்கப்பட்டு (சுமார் ரூ.5,00,000/- மதிப்பில்) பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

15. Hyundai நிறுவனத்தின் உதவியுடன் (நமது பேரவையின் Hyundai உறுப்பினர்களின் நீண்ட நெடிய முயற்சியின் விளைவாக) நமது அ.தொ.ப.நிலையத்தில் பயிற்சியாளர்களுக்கான "**2 வகுப்பறை கட்டிடங்கள்**" கட்டி முடிக்கப்பட்டு (சுமார் ரூ.8,00,000/- மதிப்பில்) பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

16. SSP-ன் CSR Activity உதவியுடன் நமது SSP உறுப்பினர்களின் வழிகாட்டுதலின்படி, பெறப்பட்ட **ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடுகள், நுழைவு வாயில் வளைவு அமைப்பதற்கான** பணியினை நமது அ.தொ.ப.நிலைய முன்னாள் பயிற்சியாளர் திரு. செந்தில்குமார் SSP அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, நுழைவு வாயிலில் வளைவு பொருத்தப்பட்டு (சுமார் ரூ.8,00,000/- மதிப்பில்) பணிகள் நிறைவு பெற்றன.

17. நமது அ.தொ.ப.நிலையத்தில் நடப்பு ஆண்டுமுதல் (2017-18) **பட்டமளிப்பு விழா** சிறப்பாக கொண்டாடப்பட்டு அதில், Trade வாரியாக முதல் மதிப்பெண் பெறும் பயிற்சியாளர்களுக்கு, பட்டயம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

18. நமது அ.தொ.ப.நிலையத்தில் மகளிருக்கான **Napkin Wending & Destroyed Machine (நாப்கின் மெஷின்)** டைட்டன் நிறுவனத்தின் மூலமாகப் பெற்றுத்தரப்பட்டு, பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

19. நமது **Alumni**-யின் முயற்சியால் **BMW** நிறுவனத்தின் சார்பாக தமிழகத்தில் உள்ள அ.தொ.ப.நிலையத்தின் 5 மண்டலங்களுக்கும் (சேலம்-1, தஞ்சாவூர்-1, விருதுநகர்-4, புதுக்கோட்டை-1, அரக்கோணம்-1, சாத்தூர்-1, கடைநல்லூர்-1, நாகர்கோவில்-1, செங்கல்பட்டு-1) ரூ. 20,00,000/- மதிப்புள்ள **BMW** கார் எஞ்சின்கள் (ரூ.2,40,00,000/- மதிப்புள்ள) 12 எஞ்சின்கள் பயிற்சியாளர்களின் பயிற்சி மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டது.

20. சேலம் அ.தொ.ப.நிலையத்தில் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் இருந்துவந்த **Vertical CNC Milling Machine** நமது **Alumni**-யின் சார்பாக ரூ. 85,000/- மதிப்பில் பழுது நீக்கி, பயிற்சியாளர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது.

21. நமது **Alumni**-யின் சார்பாக **TNEB** களப்பணியாளர் போட்டித் தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பானது, கடந்த செப்டம்பர் 2018 முதல் ஒவ்வொரு ஞாயிறு தோறும் தொடர்ந்து 15 வாரங்கள் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் சேலம் மற்றும் தருமபுரி அ.தொ.ப.நிலையங்களைச் சார்ந்த சுமார் 500க்கும் மேற்பட்ட ஆண்-பெண் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

22. 27-2-2020 முதல் 29-2-2020 வரை மூன்று தினங்கள் சேலம் மண்டலத்தில் நடைபெற்ற மண்டல அளவிலான 2020ம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு தொடர்ந்து மூன்று நாட்களும் 2200 பேருக்கு மதிய உணவு (சுமார் 1 லட்சம் மதிப்பில்) வழங்கப்பட்டது.

**இவ்விதம் இந்தியாவிலேயே மிகச்சிறந்த முன்னுதாரணமாக நமது Salem Govt. I.T.I. Alumni Association செயல்பட்டு வருகிறது. சேலம் அ.தொ.ப.நிலையத்தில் பயிற்சி பெற்று, இன்று நலமுடனும், வளமுடனும் சமுதாயத்தில் சிறப்பாக வாழ்ந்துவரும் நாம் அனைவரும், நமது Salem Govt. I.T.I. மற்றும் பயிற்சியாளர்கள் வளர்ச்சியில் பங்குபெற நமது Salem Govt. I.T.I. Alumni Association-ல் உறுப்பினராக சேர தங்களது தொலைபேசி எண், முகவரி உள்ளிட்ட தகவல்களை பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வரவேற்கிறோம்.**

இங்ஙனம்,

# சேலம் அ.தொ.ப. நிலைய முன்னாள் பயிற்சியாளர்கள் பேரவை

தொடர்புக்கு : **K. சண்முகம் ✆ 94421-23870, S. சங்கரன் ✆ 97500-91944, O.M. செந்தில்குமார் ✆ 98420-49695**

JD Compute Offset, Slm-1. Cell : 9362 9367 26